பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 06 செவ்வாய்க்கிழமை 18.02.2025 | அதிர்வு 202

## பிரி. தூதுவருடன் சுமந்திரன் பேச்சு



இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக்கை இன்று செவ்வாய்க்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டாக களமிறங்கவே தமிழரசு விருப்பம்

## இப்படி பதில் தலைவர் சி.வி.கே. கூறுகின்றார் சிறீதரனை நீக்கும் எண்ணமும் இல்லையாம்

(எஸ்.நிதர்ஷன்)

“எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்துக் கூட்டாகப் போட்டியிடவே விரும்புகின்றோம். இது தொடர்பில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சி பேச்சு நடத்தும்.”

- இவ்வாறு இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் சம்பந்தமாகவும் அதனை எவ்வாறு நாங்கள் எதிர்கொள்ளலாம் என்கின்ற விடயங்கள் தொடர்பாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது பரிசீலிக்கப்பட்டது.

அத்தோடு தேர்தலில் தனித்து போட்டியிட்டு ஏனையோரையும் இணைத்துக் கொள்ளலாமா என்ற ஒரு நிலைப்பாடு இருந்தது. ஆனால் இப்பொழுது தெளிவாகவே நாங்கள் ஒரு முடிவை எடுத்திருக்கிறோம். 03

# ஜனாதிபதி வாக்குறுதியளித்தவாறு வடக்கு மாகாணத்துக்கு அதிக நிதி

## ஆளுநர் நன்றி தெரிவிப்பு



“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வாக்குறுதியளித்தவாறு வடக்கு மாகாணத்துக்குப் பல்வேறு திட்டங்களுக்கு பெருமளவு நிதி ஒதுக்கியுள்ளார். அவருக்கு எமது வடக்கு மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண உளளூராட்சி அமைச்சின் திட்டமீளாய்வு கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 02



# பாணின் விலை குறைப்பு

கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு இறாத்தல் பாணின் விலையை 10 ரூபாவால் குறைப்பதற்குக் பேக்கரி உரிமையாளர்கள் இணங்கியுள்ளனர் என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. 04

# தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றாத அநுர அரசு பட்ஜட் முன்மொழிவுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தும்?

## இப்படி மொட்டுக் கட்சி கேள்வி




"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அவ்வாறான நிலைமையில் வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளை மாத்திரம் எவ்வாறு செயற்படுத்த முடியும்?"

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் சுபீட்சமான காலப் பகுதியென்றால் அது மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைத்தான் கூறமுடியும். பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனை யாரும் மறந்துவிட முடியாது. வரவு – செலவுத் திட்டத்தில் எம்மால் குறிப்பிடப்பட்ட அனைத்தையும் நாம் நிறைவேற்றினோம்.

ஆனால், அரசு தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அவ்வாறான நிலைமையில் வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளை மாத்திரம் எவ்வாறு செயற்படுத்த முடியும்? அவை வெறும் ஏட்டில் மாத்திரமே காணப்படுகின்றன.

மக்களை ஏமாற்றி போலியான வாக்குறுதிகளை வழங்கினார்கள். தற்போது அவ்வாறான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதனை மக்களும் நன்கு உணர்ந்துள்ளார்கள்." – என்றார்.

# ரிஷாத் எம்.பியின் தந்தை காலமானார்


(எம்.எச்.எம். சியாஜ்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் தந்தை அல்ஹாஜ் பதியுதீன் தனது 78 ஆவது வயதில் நேற்று திங்கட்கிழமை இரவு காலமானார்.

மன்னார், உப்புக்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது புத்தளம், தில்லையடி அல் மினாபுரத்தில் வசித்து வருகின்றார்.

இவர் காலஞ்சென்ற அப்துல் றஹ்மான் மரியம் பீவியின் மகனும், ஹாஜியானி ஹலீமத் ஸகிய்யாவின் கணவரும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், ரியாஜ் பதியுதீன், பாரிஷா பர்வின், பஸ்மிலா பர்வின் காலஞ்சென்ற பைறூஸா பர்வின் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஜனாஸா இன்று செவ்வாய்க்கிழமை அஸர் தொழுகையை அடுத்து புத்தளம் ரத்மல்யாய அல் காசிமீ மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படுகின்றது.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஜனாதிபதி...**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் ஜனாதிபதியால் நேற்று திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்குப் பல்வேறு வகையிலும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகளவான நிதியும் வடக்கு மாகாண சபைக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதி தனது உரையில், வடக்கு அதிகாரிகள் கோரிய நிதியையே வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நாம் முழுமையாகச் செலவு செய்யவேண்டும். எவ்வளவு விரைவாக அந்த நிதியை செலவு செய்து முடித்து மேலதிக நிதியை நாம் கோரவேண்டும். இது எமக்கு சவாலானதுதான்.

நாம் நிதியைத் திருப்பி அனுப்பாமலே நிதியை திருப்பி அனுப்பிய தான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்தநிலையில், பெருமளவு நிதி எமக்கு கிடைக்கப்பெறும் நிலையில் அதை உரிய முறையில் செலவு செய்யவேண்டும்.

எமது செயற்பாடுகளை ஊடகங்கள் உட்பட பல தரப்புக்களும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றன. எனவே, வெளிப்படைத்தன்மையாக நிதியை விரைவாக செலவு செய்யவேண்டும்.

ஜனாதிபதியால் வீதி அபிவிருத்திக்காக விசேட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கு சமமாகப் பகிரத் தேவையில்லை. தேவைப்பாடுகள் எங்கு அதிகமோ அங்கு அதிகளவு நிதியை ஒதுக்குங்கள்.

இந்தத் திட்டத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்துகொண்டு தெரிவுகளை முன்னெடுக்காமல் வன்னிப் பிராந்தியத்தின் ஒவ்வொரு இடத்துக்கும் சென்று நேரடியாகப் பார்த்து தெரிவு செய்யுங்கள். அப்போதுதான் அந்த மக்கள் அனுபவிக்கின்ற வலி உங்களுக்குத் தெரியும்.

எமக்கு இந்தத் திட்டங்களைச் செயற்படுத்தி முடிப்பது சவாலானதுதான். எங்களால் முடியும் என நினைத்துக் கொண்டு இதைச் செய்யுங்கள். இரவு, பகல் பாராமல் இதைச் செய்ய வேண்டும். நாங்கள் முன்மாதிரியானவர்கள் என்பதை செயலில் காட்டுங்கள்.

இந்தத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும்போது ஊழல், இலஞ்சம் என்பன இருக்கக் கூடாது. எல்லாம் வெளிப்படைத்தன்மையாக நடைபெற வேண்டும். இந்த அரசின் கொள்கையும் அதுதான்." – என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன்,

"அதிகாரிகளின் அர்ப்பணிப்பில்தான் இவற்றின் வெற்றி தங்கியிருக்கின்றது. எமது மாகாணத்துக்கு உட்பட்ட அனைத்துத் திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயற்படுத்தி முடிக்கவேண்டும்." – என் று வலியுறுத்தினார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**உள்ளூராட்சி...**

அதாவது ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளுடன் பேசி முடிவெடுப்பதென தீர்மானித்து உள்ளோம். அதேநேரம் இரண்டு கட்சி தலைவர்களுடன் நான் ஏற்கனவே பேசியிருக்கிறேன்.

ஆகவே நாம் எல்லோரும் ஒரு நிலைப்பாட்டிற்கு வந்து இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையை அனுசரித்து நாங்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் செறற்பட வேண்டும்.

எங்களுடைய அரசியல் வாழ்க்கைகள் அரசியல் நடவடிக்கைகள் 1944 இல் இருந்து ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை தமிழ்த் தேசியம் என்பதுதான்.

குறிப்பாக தந்தை செல்வநாயகம், வன்னியசிங்கம் மற்றும் ஜ.ஜீ பொன்னம்பலம் காலத்திலே தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்று சொல்லி வந்த போது நானும் கூட அதில் நின்று சத்தம் போட்டிருக்கின்றேன்.

ஆனால் இப்பொழுது அந்த நிலை இருக்கின்றதா என்று கேட்டுப் பார்த்தால் சில நேரங்களில் தலைகுனிந்து நிற்கின்ற நிலைதான் இருக்கிறது.

மத்தியிலே வருகின்ற ஜனாதிபதி எப்போதும் சிங்களவராகத்தான் இருக்க முடியும். மத்தியில் இருக்கின்ற ஆட்சியும் சிங்களத் தேசிய ஆட்சியாகத்தான் இருக்க முடியும். அவ்வாறான நிலையில் நாங்கள் எங்கள் தனித்துவத்தைப் பேணிக் கொண்டு செயற்பட வேண்டும்.

அதிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசிய தலைமை உள்ள கட்சிகளுடன் ஒரு உடன்பாட்டிற்கு வர முடியுமென்று நான் நம்புகின்றேன். அதற்காக இன்னும் சிலரோடு பேச வேண்டி இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தான் தாம் சுதந்திரமாக நின்று மத்தியில் இருக்க கூடிய ஜனாதிபதியுடனோ அரசாங்கத்துடனோ பேசக் கூடிய சுயம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

அதேநேரம் தேசிய கட்சிகளின் உறுப்பினர்கள் எவ்வாறாயினும் அந்தத் தலைமைக்கு கட்டுப்பட்ட உறுப்பினர்களாகவே இருப்பார்கள். சுயமாக நின்று பேசக்கூடிய ஆளுமை அவர்களுக்கு இருக்காது.

ஆகையினல் நாங்கள் தீர்மானித்த அடிப்படையில் எங்களுடைய மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையைமக்களிடத்தேமுதலில்முன்வைக்க விரும்புகிறோம்.

அதற்கு பிறகு ஏனைய கட்சிகளோடு நாங்கள் பேசி சில நேரங்களில் மாவட்டங்களில் சில வேறுபாடுகள் அமையக் கூடிய வாய்ப்புகள் இருந்தாலும் அவற்றையும் கருத்தில் கொண்டு தனித்தனியாக இணக்கப்பாட்டோடு போட்டி போடுவோம்.

அதாவது எந்தக் கட்சியும் இன்னொரு தமிழ்க் கட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யாமல் தேசிய நலன் சார்ந்து ஒன்றாகப் போட்டியிடுவது அல்லது தமிழரசுக் கட்சியின் பட்டியலிலே இப்பொழுது பல வெற்றிடங்கள் இருக்கின்றது என்பதால் மற்றக் கட்சிகளின் வேட்பாளர்களை அந்தப் பட்டியலில் இணைத்துக் கொண்டு ஒரு பட்டியலும் இன்னொரு பட்டியலும் இணைந்த பட்டியலாகப் போட்டியிட முடியுமா என்பதை நாங்கள் பரிசீலிக்க வேண்டும்.

ஆனால் முக்கியமானது தமிழ்த் தேசியம் என்ற நிலைப்பாடு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் முன் கூட்டாக முன்வைக்க வேண்டும் என்பமை நான் எதிர்பார்க்கிறேன்.

மிக அண்மைக் காலத்தில் எல்லா தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இந்தக் கருத்தை அனுசரித்து ஒரு ஊடக சந்திப்பில் ஒருமித்த கருத்தை மக்களுக்குத் தெரிவிக்கக் கூடிய சூழலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் எங்களால் எடுக்கப்படுகின்றது.

ஆகவே இந்த செய்தியை மக்கள் முன் கொண்டு செல்ல வேண்டுமென ஊடகவியலாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம். தமிழ்த் தேசியத்தை வெறுமனே பேசிக் கொண்டிருக்க முடியாது. நடைமுறையிலே அது வர வேண்டும்.

மக்களிடத்தே இன்னுமொரு கருத்து உள்ளது. அது என்னவெனில் அரசாங்க கட்சிகளுடன் போனால் தான் காரியங்கள் நடக்கு என்பது. உண்மையில் அப்படி ஒன்றும் இல்லை. இது உள்ளூராட்சி விடயங்கள் தேசியம் சார்பில் நாடாளாவிய ரீதியில் எடுக்கப்படுகின்ற முடிவுகள். ஆகவே, உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் தெரிந்தவன் என்ற வகையில் எனக்கு இதில் என்ன நடக்கும் என்பதும் தெரியும்.

சில சில நிதி ஒதுக்கீடுகள் விசேடமாக வருமானால் அது எல்லாருக்கும் வரும். நாங்கள் கேட்டுப் பெறலாம். ஆனால் சுயத்தோடு தனித்துவத்தோடு நின்று உள்ளூராட்சி தலைவர்கள் உள்ளூராட்சி மன்றங்கள் பேச வேண்டுமானால் அவை எங்களுடைய தமிழ்த் தலைமையினுடைய நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டும் என்பதை வடக்கு, கிழக்கில் இருக்கக்கூடிய எங்களுடைய மக்களுக்கு கட்சி சார்ந்து தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இது ஒரு முதல் முயற்சி. தொடர்ந்து இந்த விடயங்களை நாங்கள் கட்சி ரீதியாகவும் ஏனைய கட்சிகள் சார்ந்தும் முன்னெடுக்க இருக்கின்றோம்.” – என்றார்.

இதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளித்திருந்தார்.

**கேள்வி** - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிட சந்தர்ப்பம் இருக்கா?

**பதில்** - தேர்தல் சம்பந்தமாக ஏற்கனவேசிலதலைவர்களுடன்பேசியிருக்கின்றேன். அதேபோன்று இன்னும் சிலரோடு பேச வேண்டி இருக்கின்றது. அது கூட்டமைப்போ இல்லையோ என்பதற்கப்பால் அது எதுவென நாங்கள் பெயர் சொல்ல விரும்பவில்லை.

ஆனால் கூட்டாக என்று தான் இப்போது சொல்கின்றோம். கூட்டாக வர வாய்ப்பிருந்தால் அதற்கான முயற்சிகள் எல்லாம் எடுக்கப்படும்.

**கேள்வி** - கூட்டாக என்றால் கட்சி சின்னத்தை விட்டுக் கொடுப்பீர்களா?

**பதில்** - அப்படி இல்லை. இதைப் பற்றி எல்லாம் நான் இப்போது பேச விரும்பவில்லை. ஆனால், ஒன்று மட்டும் நான் அவர்களுக்குச் சொல்லி இருக்கின்றேன்.

அதாவது கூட்டாகத் தமிழ்த் தலைமைகளைக் கொண்ட கட்சிகளுக்குத் தான் வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதையே தலைவர்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன்.

எங்களுக்கிடையே வேறுபாடுகள் இருக்கலாம். இதில் இன்னுமொன்றையும் சொல்ல வேண்டும். அதாவது என்னைப் பொறுத்தவரையில் போராளிக் கட்சிகள் எவையாக இருந்தாலும் சரி இதுவரையில் எந்தக் கட்சியையும் ஒட்டுக்குழு என்று நான் சொன்னதே கிடையாது.

ஏனெனில் அவர்களும் இனத்திற்காகப் போராட வந்தவர்கள்தான். ஏனென்றால் போராட்ட வரலாறு ஆரம்பகாலத்தில் இருந்தே எனக்கு தெரியும். ஆக அவர்களும் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் தான். வழிமாறி அல்லது திசை மாறி அல்லது கருத்துக்களில் மாற்றம் கொண்டதாக இருக்கலாம்.

ஆனால் அவர்கள் ஒருவேளை எங்களுடன் ஒத்து வராவிட்டாலும் கூட எங்களுடைய இந்தக் கருத்து நிலைப்பாட்டையாவது அவர்கள் ஆதரிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு நாம் எடுத்துள்ள முயற்சியின் கருத்து நிலைப்பாட்டை அவர்கள் ஆதரிப்பார்களாக இருந்தால் அது வரவேற்கத்தக்கது.

**கேள்வி** - உங்கள் கட்சியின் முன்னாள் எம்.பி. சுமந்திரன் ரெலோ, புளொட் போன்ற கட்சிகளை ஒட்டுக்குழுக்கள் என கூறியது மட்டுமல்லாமல் தமிழரசு தனியாக போட்டியிட வேண்டுமெனச் செல்லியிருந்தார். ஆனால், இப்போது அவர் பொதுச்செயலாளராக வந்த பின்னர் தனது அந்த நிலைப்பாட்டை ஏதும் மாற்றியுள்ளாரா?

**பதில்** - அவர் மாற்றியிருக்கின்றாரா, இல்லையா என்பதை அவரிடம் தான் கேட்க வேண்டும். இப்போது கட்சியில் அவர் செயலாளராக இருக்கின்றார். நான் தலைவராக இருக்கிறேன் என்னைப் பொறுத்தவரையில் கட்சியினுடைய நிலைப்பாட்டை நான் கூறுகிறேன். முன்னர் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை சொல்லியிருப்பார்கள். இப்போது எங்களுடைய நிலைப்பாடு இது தான் என்று நான் சொல்லுகின்றேன். அதாவது சமகால அரசியலில் இருந்துதான் நான் பேசுகிறேன்.

**கேள்வி** - தேசிய மக்கள் சக்தியின் அலையின் அச்சத்தினால்தான் தமிழ்த் தேசிய தரப்பு கூட்டு முயற்சியா?

**பதில்** - அப்படி இல்லை. தமிழினம் யாருக்கும் எப்போதும் பயந்ததில்லை. ஆயுதப் போராட்டத்திற்கும் தமிழினம் பயப்பிட்டதில்லை. அரசியல் போராட்டத்திற்கும் தமிழினம் பயந்தது கிடையாது. ஆக யாருக்கும் பயந்து இப்ப இந்த முடிவை எடுக்கவில்லை. எங்க இருந்தாலும் தாயகம் தேசியம் தன்னாட்சி சுயநிர்ணயம் பற்றித் தானே சொல்கின்றனர். இந்த தன்னாட்சிக்குள்ளே தனித்துவம் சுயகௌரவம் சுயமானம் அடங்கியுள்ளது. அதற்காகவே நாம் இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கின்றோம். ஆக எங்களுக்குப் பயம் இல்லை.

**கேள்வி** - உள்ளூராட்சி தேர்தல் முறைமை என்பது தனித்தனியாக போட்டியிட்டால் தான் அதிக தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆட்சியை பிடிக்க முடியுமென்றும் தேர்தலை தனித்தனியாக எதிர்கொண்டு பின்னர் ஆட்சியை பிடிக்கலாம் என தமிழரசுக் கட்சி கருதுகின்றதா?

**பதில்** - தேர்தல் தொடர்பில் நாங்கள் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வருவோம். அது தனித்தனியாகவோ கூட்டாகவோ என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி** - தமிழரசுக் கட்சியின் இந்த நடவடிக்கை தேர்தலை கூட்டாக

(04ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் டிப்பர் மோதி ஒருவர் பரிதாபப் பலி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அரியாலை – மாம்பழம் சந்தி அருகில் இன்று பிற்பகல் டிப்பர் வாகனம் மோதியதில் ஆண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சைக்கிளில் வீதியால் பயணித்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மூன்றாம் பக்கத் தொடர்ச்சி

**உள்ளூராட்சி...**

எதிர்கொள்வதா அல்லது தனிதனியாகப் போட்டியிட்டு கூட்டாக ஆட்சியமைப்பதா?

**பதில்** - கூட்டாக எதிர்கொள்வது என்பது தான் எங்களுடைய நிலைப்பாடு. சில சமயங்களிலே இரண்டு அல்லது மூன்று அணிகளாகப் கூடப் போட்டியிட வாய்ப்புக்கள் இருக்கலாம். அது பரிசீலிக்கப்படும். முழு உள்ளூராட்சி சபைகளையும் தமிழ்த் தேசிய தலைமைகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர அது வாய்ப்பாக அமையுமானால் அதை நாங்கள் நிச்சயமாக அமுல் செய்வோம்.

**கேள்வி** - எல்லோரும் ஒன்றிணைய வேண்டுமெனக் கருதும் தமிழரசுக் கட்சியானது முதலில் தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் இணைக்கும் செயற்பாடுகளை எடுக்கிறதா? அந்த முயற்சி இப்போது எந்தக் கட்டத்தில் இருக்கின்றது?

**பதில்** - இதில் தனித்து நான் எதனையும் சொல்லவில்லை. எங்கள் கட்சியில் ஒரு முடிவு இருக்கின்றது. இதில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது கட்சியில் இருந்து விலகாமல் விலகிப் போய் எதிரணியில் இருந்து போட்டியிட்டவர்களை கட்சியில் இருந்து நீக்குவதென மத்திய செயற்குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. போட்டியிட்டவர்களை விடுத்து ஏனையவர்களிடம் விளக்கம் தான் கோரப்பட்டுள்ளது. விளக்கம் கோருவதென்பது நீக்குவதல்ல. சரியான விளக்கம் சொன்னால் ஒழுக்காற்றுக் குழு விசாரித்து பொருத்தமான தீர்வை எடுக்கும்.

**கேள்வி** - பொதுச்செயலாளர் பதவியை தொடர்ந்து வகிக்க முடியாத அளவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கத்திற்குச் சுகயீனமா?

**பதில்** - அவருக்கு உடல் நிலையில் பிரச்சினை இருக்கின்றது. இந்தியாவில் சிகிச்சை பெற வேண்டிய தேவை இருக்கின்றது. அதேநேரம் முன்னர் இருந்ததை விடவும் இப்போது நாடாளுமன்றப் பொறுப்பும் அவருக்கு இருக்கின்றது.

அதுவும் வன்னியில் காணி அபகரிப்பு, ஆக்கிரமிப்பு, எல்லைப் பிரச்சினையும் இருக்கின்றது. அவற்றையெல்லாம் கையாள வேண்டுமென தானாகவே முன்வந்து பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

**கேள்வி** - ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அரியநேத்திரனுக்கு கட்சியால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதே நேரத்தில் அவரை ஆதரித்த சிறீதரன் எம்.பிக்கும் ஏதும் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றதா?

**பதில்** - அரியநேத்திரனுக்கு எதிராக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரைக் கட்சியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமான கடிதமும் அவருக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

சிறீதரனைப் பொறுத்தவரையில் மத்திய செயற்குழுவில் இந்த விடயம் பரிசீலிக்கப்படுகின்றபோது தெளிவாகவே பொது வேட்பாளரைத்தான் ஆதரிக்கப் போகிறேன் என்று அவர் சொல்லியிருந்தார்.

இதன்பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் தெரிவில் கூட இந்தப் பிரச்சினை வந்தது. அவர் கட்சிக்குச் சொல்லிப் போட்டுத்தான் ஆதரித்தவர். அது அப்படியேதான் இருக்கின்றது. அவருக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதேவேளை, சிறீதரனைக் கட்சியில் இருந்து நீக்கப் போவதாக பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால், கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வைத்து சிறீதரனை யாராவது கட்சியில் இருந்து நீக்கப் போகிறீர்களா என நான் கேட்டிருந்தேன்.

அப்படி எவரும் அவரை நீக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால், வாய்க்கு வந்தபடி சொல்லித் திரிகின்றனர். உண்மையில்

சிறீதரனை கட்சியில் இருந்து நீக்கும் எண்ணமே கிடையாது." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பாணின் விலை...**

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில், ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 10 ரூபாவால் குறைப்பதற்கு பிரீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் நேற்று தீர்மானித்திருந்தன.

இந்தநிலையில்ஒருஇறாத்தல்பாணின் விலையை 10 ரூபாவாலும், ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கும் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் ஒப்புக்கொண்டுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பிரி. தூதுவருடன்...**

நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல் இந்தப் பேச்சுகள் நீடித்தன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிகின்றது.

பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக்கின் அழைப்பின் பேரில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது நாட்டின் சமகால அரசியல் நிலைவரம், அரசின் நடவடிக்கைகள், தமிழ் மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள், வரவு – செலவுத் திட்ட யோசனைகளின் தாக்கம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த செப்டெம்பர் மாதம் மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வரவிருக்கின்றது.

இந்நிலையில், அந்தத் தீர்மானத்தின் ஊடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு அளிக்கப்பட்ட ஆணையின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டு வரும் கடந்த கால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறையின் தற்போதைய நிலைவரம் மற்றும் அதனை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்குள் முழுமையாக நிறைவு செய்வதற்கான சாத்தியப்பாடு என்பன பற்றி உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பேட்ரிக்கிடம் சுமந்திரன் கேட்டறிந்தார்.

வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஜெனிவா அமர்வில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பங்குபற்றி உரையாற்றவிருக்கின்றார். அந்த உரையின் பின்னர் இலங்கை விடயத்தை ஜெனிவாவில் கையாளும் முறைமை குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர முடியும் என்று பிரிட்டிஷ் தூதுவர் தெரிவித்தார்.

அத்தோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகவுள்ள நிலையில், இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகளின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

# உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடுங்கள்

## தேர்தல் ஆணைக்குழுவிடம் சஜித் வேண்டுகோள்

"வரவு – செலவுத் திட்ட விவாதத்துக்குப் பின்னர் அதாவது எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்."

– எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களைச் சந்தித்தனர். இதன் பிற்பாடு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் பல வருடங்களாக ஒத்திவைக்கப்பட்ட போது, ஐக்கிய மக்கள் சக்தி, நீதிமன்றத்துக்குச் சென்று தேர்தலை நடத்த வேண்டும் என்ற நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றது.

பிரச்சினையான சூழ்நிலை காரணமாகப் பழைய வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்பட்டு, புதிய வேட்புமனு கோரப்பட வேண்டும் என்று அனைவரும் முன்வந்து இதனை ஆதரித்தனர்.

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தி 66 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது வரவு – செலவுத் திட்டத்தின் மீது இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 25 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும். அதன்பிறகு, குழு நிலை விவாதம் நடக்கும். சகல நாடாளுமன்ற




உறுப்பினர்களும் இக்காலப்பிரிவில் சட்டவாக்கப் பணிகளைச் செய்ய உறுதி பூண்டுள்ளனர். சபையில் மட்டுமன்றி பல்வேறு குழுக்களும் காணப்படுகின்றன.

இந்த வரவு – செலவுத் திட்ட காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டவாக்க நடைமுறையில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் வாய்ப்பை அவர்களுக்கு வழங்கி, எதிர்வரும் மார்ச் 21 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல் வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

பல்வேறு குழுக்களும் தேர்தலை ஒத்திவைக்கக் கோரியும் வருகின்றன, நாடாளுமன்ற நடைமுறை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். புதிதாக நாடாளுமன்றத்திற்கு வந்தவர்கள் இதனைப் பெரியதொரு விடயமாகப் பார்க்காமல் இருக்கலாம், நாடாளுமன்ற நடைமுறை தெரியாவிட்டால் புத்தகங்களைப் படித்துப் புரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எனவே, வரவு – செலவுத் திட்ட விவாதத்துக்குப் பின்னர் தேர்தல் அறிவிப்பை வெளியிடுமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

ஆளுந்தரப்பைச் சேர்ந்த தலைவர்கள் தேர்தல் ஆணைக்குழுவை தமது கைப்பாவையாகக் கருதுகின்றனர். தேர்தலை நடத்த வேண்டிய திகதிகள் மற்றும் வேட்புமனுக்களைக் கோரும் திகதிகளை அரசு தீர்மானிக்க முடியாது. ஆளுந்தரப்பினர் இவற்றைக் குழப்பிக்கொண்டுள்ளனர்." – என்றார்.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தல் ஆணையத்தின் களத்தில் பந்து

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் அவசர அவசரமாக நேற்றோடு நிறைவேற்ற பட்டுவிட்டது.

இந்தச் சட்டமூலத்தை விசேட பெரும்பான்மையுடன் - அதாவது மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு - நிறைவேற்ற வேண்டும் என்று உயர் நீதிமன்றம் முடிவு செய்ததற்கு அமைய இந்தச் சட்டம் மூலம் இரண்டாம் வாசிப்பில் 187 உறுப்பினர்களின் ஆதரவுடனும், மூன்றாம் வாசிப்பின் போது 158 உறுப்பினர்களின் ஆதரவுடனும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எதிராக எந்த உறுப்பினர்களும் வாக்களிக்கவில்லை. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து இந்தச் சட்டமூலத்தை ஆதரித்து வாக்களித்து, அதனைச் சட்டமாக்கியிருக்கிறார்கள்.

இதன் மூலம் 2023 ஆரம்பத்தில் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் ரத்து செய்யப்படுகின்றது. புதிதாக வேட்பு மனுக்களை ஏற்றுத் தேர்தலை நடத்துவதற்கு வழி செய்யப்பட்டிருக்கின்றது.

நேற்று சட்டமூலம் நிறைவேற்றப்பட்டகையோடு, அதன் மீது சபாநாயகர் ஜகத் விக்ரம்ரத்தின சான்றுரைத்து, ஒப்பமிட்டு, அதை அங்கீகரித்து இருக்கிறார். அதன்படி நேற்றே அந்தச் சட்டமூலம் நடைமுறைக்கு வந்துவிட்டது.

இனி, அந்தத் தேர்தலை நடத்தும் சுயாதீன அதிகாரமும் தனித்துவப் பொறுப்பும் தேர்தல் ஆணையத்துக்கு வந்துவிட்டது.

நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்தின்படி உள்ளூராட்சித் தேர்தலை அடுத்த மூன்று மாத காலத்துக்குள் வேட்பு மனுவை ஏற்பதற்கான திகதியை அறிவித்து, அதன் பின்னர் தேர்தலை உரிய காலத்தில் தேர்தல் ஆணையம் நடத்த வேண்டும்.

எப்போது வேட்பு மனுவை ஏற்றுக் கொள்வது என்ற திகதி நிர்ணயம் தொடர்பாக இப்போது சர்ச்சை எழுந்திருக்கின்றது. அவசர அவசரமாக தேர்தலை நடத்த ஆளும் தரப்பு விரும்புகின்றது. தன்னுடைய அரசுக்கு மக்கள் மத்தியில் விழுந்து வரும் செல்வாக்கை உணர்ந்து கொண்டுள்ள ஆட்சி தரப்பு, அது மோசமான கட்டத்தை அடைய முன்னர் தேர்தலை நடத்தி முடித்து விடக் கங்கணம் கட்டி நிற்கின்றது. அதை எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன.

வரும் வரும் மார்ச் 21 வரை நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் தொடர்ந்து இடம்பெற இருப்பதால் அதன் பின்னர் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசத்தை வழங்கி, தேர்தலை அறிவிக்கும்படி எதிர்க்கட்சிகள் வலியுறுத்திக் கேட்கின்றன.

இது தொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று இந்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் ஆணித்தரமான உரை ஒன்றை நிகழ்த்தினார்.

''எனது கட்சியின் ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் நான்தான். நானே கட்சியின் பொதுச் செயலாளர். இந்த நாடாளுமன்றத்தில் எந்த உப குழுவிலும் எங்களுக்கு - குறிப்பாக சிறிய கட்சிகளுக்கு - ஆளும் தரப்பு இடமளிக்கவில்லை. ஆக எங்களுக்கு நாடாளுமன்றத்தில் ஜனநாயகக் கடமை ஆற்ற கிடைத்த இடம் இந்த சபையில் உரையாற்றுவதுதான். அதுவும் வரவு - செலவுத் திட்டத்தில் பங்கு கொண்டு உரையாற்றுவதன் மூலம் மட்டுமே எங்கள் மக்களின் நிலைப்பாட்டை நான் எடுத்துரைக்க முடியும். இந்தச் சமயத்தில் நீங்கள் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனுக்களை ஏற்பதற்கான அறிவித்தலை விடுத்தால் நான் உள்ளூராட்சி சபைகள் முழுவதிலும் வேட்பு மனுக்களை ஒழுங்கு செய்து கையெழுத்திடச் செல்வதா அல்லது இங்கு எனது மக்கள் பிரதிநிதித்துவக் கடமையை ஆற்றுவதா?''- என்று கேள்வி எழுப்பினார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இதே நிலைப்பாட்டை 13 எதிர்க்கட்சிகள் ஒப்பமிட்டு சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் வழங்கியிருக்கிறார்கள்.

என்ன செய்யப் போகின்றது தேர்தல் ஆணையம்? உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக அது என்ன முடிவு செய்யப் போகின்றது? பந்து இப்போது தேர்தல் ஆணையத்தின் களத்துக்குள்...!




# பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளுடன் நாவிதன்வெளி பிரதேச கலாசார விழா

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தோடு இணைந்து ஏற்பாடு செய்து நடத்திய பிரதேச இலக்கிய விழா, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுல நாயகி சஜிந்திரன் தலைமையில் நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் (15) நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். எம்.ஷினாஸ் ஒருங்கிணைப்போடு நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பிரதேச மட்ட இலக் கியப் போட்டியில் வெற்றி பெற்றவர் களுக்கு சான்றிதழ்கள், மற்றும் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

தமிழ் – முஸ்லிம் கலாசார பண்பாட்டு





கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற இந்தக் கலாசார இலக்கிய விழாவில் பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு 'சுபதம்' விருது வழங் கப்பட்டது. நிகழ்வுகளில் பங்குகொண்ட மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.எல்.ஏ.கபூர், உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவ ரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராசா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம். நின்சான், சொறிக்கல்முனை ஹோலிகு ரோஸ் திருத்தலத்தின் அருட்தந்தை ஜீ.சுலக்சன், சமூக சேவையாளர் கே.புவனரூபன் உட்பட பிரதேச செய லகத்தில் கடமையாற்றும் உத்தியோ கத்தர்கள், கலைஞர்கள், இலக்கிய அதிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இலக்கிய அதிதியாக எழுத்தாளரும் ஆசிரியருமான திருமதி ஏ.ஆர்.பாத்திமா சூபா கலந்து கொண்டார்.






# கல்முனை சாஹிரா கல்லூரியினரால் ஆதம்பாவா எம்.பி.க்குக் கௌரவம்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசா லையின் பழைய மாணவரும், அங்கு கற்பித்த ஆசிரியரும், தேசிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும், அரசமைப்பு பேரவை உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்துக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவாவை பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை சாஹிரா தேசிய பாட சாலைச் சமூகத்தினரால் இந்த நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டது.

வகுப்பறையில் இருந்து பாராளு மன்றம் வரை எனும் தொனிப்பொருளில் கல்முனை சாஹிரா தேசிய பாட சாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிர் தலை மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதி அதிபர்கள், கல்வி சார், சாரா ஊழியர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் கல்லூரியின் அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோர் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவுக்கு முடி சூடி, பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின் னம் வழங்கிக் கௌரவித்தனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



### சம்மாந்துறை வைத்தியசாலைக்கு

# 5 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

(றியாஸ் ஆதம்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் விசேட குழந்தைகள் பராமரிப்பு பிரிவுக்கு சுமார் 5 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த மருத்துவ உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (17) சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பீ. பிரபாசங்கர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மருத்துவ உபகரணங்களைக் கையளித்தார்.

இதன்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் சிறுவர் நோயியல் வைத்திய நிபுணர் டாக்டர் பீ.எம்.அர்ஷத் அஹமட், பிராந்திய உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




# பச்சை மிளகாய் 2000 ரூபா!

(வி.ரி.சகாதேவராஜா)

அண்மைக்காலமாக பச்சை மிளகாயின் விலை விஷம் போல் ஏறி வருகிறது . கல்முனை பிரதான சந்தையில் ஒரு கிலோ பச்சை மிளகாயின் விலை 2000 ரூபாவுக்கு இன்று (18) விற்பனை செய் யப்பட்டது.

சந்தையில் இந்த விலை என்றால் கிராமங்களில் உள்ள சில்லறைக் கடைகளில் நிலைமை வேறு. கிலோ 2400 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டது.

அதேவேளை, ஏனைய மரக்கறிகளின் விலைகளும் என்று மில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகிறது.






# கல்முனையில் சாரணர் பவனி!

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் முகமாக சாரணர் பவனி நேற்று முன்தினம் கல்முனை நகரில் நடைபெற்றது.

அதேவேளை, அங்கு நடைபெற்று வந்த மூன்று நாள் சாரணர் பயிற்சி முகாமின் இறுதி நாள் நிகழ்வுக்கு அணி சேர்த்தால் போல் இந்தப் பவனி இடம்பெற்றது.

மேலும், கிளீன் சிறிலங்கா நிகழ்ச்சி திட்டத்துக்கு அமைவாகவும் இது முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது பாடசாலையின் அதிபர் அருட்சகோ. எஸ்.இ.றெஜி னோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் இறுதியில் சாரணர் பயிற்சி முகாமில் கலந்து சிறப்பித்த பாடசாலை மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.










# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டத்தின் கீழ் காரைதீவு கடற்கரையில் சிரமதானம்

(நூருல் ஹுதா உமர்)

நாடு தழுவிய ரீதியில் “சுத்தமான கடற்கரை கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலம்” எனும் தொனிப்பொருளில் கடற்கரை சூழலை சுத்தம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இவ் வேலைத்திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேச செயலகம், பிரதேச சபை, பாதுகாப்பு படையினர் மற்றும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து மாளிகைக்காடு, காரைதீவு கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் விசேட வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வானது திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா வின் தலைமையில் காரைதீவு பிரதேச செயலாளர் தலைமை மற்றும் வழிகாட்டலில் கல்முனை பிராந்திய தொழில் சார் நலன் மற்றும் உணவுப் பாதுகாப்பு வைத்திய அதிகாரி டாக்டர். எ.எஸ்.எம். பௌசாட், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர், மாவட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்,



பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு களத்தடுப்பு பிரிவினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், காரைதீவு பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பாதுகாப்பு படையினர், பொது நிறுவனங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பொது மக்களது பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

# எமது கடலைப் பயன்படுத்தி சீனா இந்தியாவை அச்சுறுத்த முடியாது!

## யாழ். மாவட்ட கிராமிய அமைப்பின் தலைவர் நற்குணம்

(எஸ்.நிதர்ஷன்)

இந்திய அத்துமீறிய இழுவமடி படகுகளால் எமது மீனவர்கள் பாதிக்கப்படுவரும் நிலையில், நாம் பாதிக்கப்படுவதைக் காரணமாக்கி, சீனா இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மை பயன்படுத்துவதற்கு இடமளிக்க மாட்டோம்.

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கிராமிய அமைப்புக்களில் தலைவர் செல்லத்துரை நற்குணம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் இன்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் சீனத் தூதரக அதிகாரிகளை எமது கடற் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் சந்தித்தோம்.

அவர்களை சந்தித்ததன் நோக்கம், கடந்த கொரோனா காலங்கள் மற்றும் இந்திய இழுவைப் படகுகளால் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளை செய்தார்கள் என்பதே.



அவர்கள் செய்த உதவிக்கு நன்றியை தெரிவித்ததோடு தொடர்ந்தும் இந்திய இழுவை மடியால் பாதிக்கப்பட்டுவரும் எமது மீனவர்களுக்கு உதவி செய்யுமாறு கோரிக்கை விடுத்தோம்.

இதே கோரிக்கையை இந்தியா அரசிடமும் முன் வைத்திருக்கிறோம். யார் எமது மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினாலும் அதை நாம் பெற்றுக் கொள்ள தயாராக இருக்கிறோம்.

இந்தியாவின் அத்துமீறிய இழுவை மடிப் படகுகளால் தொடர்ச்சியாக நாம் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், சீனா எமக்கு உதவி செய்கிறோம் என்று தெரிவித்துள்ளது. இந்த நிலையில் எமது கடல் பிராந்தியத்தால் இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மை பயன்படுத்த நினைத்தால் அதுக்கு நாம் ஒரு போதும் சம்மதிக்க மாட்டோம்.

இந்தியா எமது அயல் நாடு. அது மாத்திரமல்ல எமது தொப்புள் கொடி உறவு என்ற ரீதியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக எமது கடலை பயன்படுத்த சீனாவை நாம் அனுமதிக்கப் போவதில்லை.- என்றார்.



# உலக இராம கிருஷ்ணமிஷன் உபதலைவருக்கு காரைதீவில் பூரண கும்பங்களுடன் வரவேற்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

உலகளாவிய இராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவர் அதிவண ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ்ஜுக்கு காரைதீவில் நேற்று (17) திங்கட்கிழமை மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இராமகிருஷ்ண மிஷனுக்கு இரு பெரும் துறவிகளை அளித்த காரைதீவு மண்ணுக்கு வருகை தந்த இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைத் தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ், முன்னாள் தலைவரும் காசி ராமகிருஷ்ண மடத்தின் தலைவருமான சுவாமி சர்வரூபானந்த ஜி மகராஜ், மதுரை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி நித்யதீபானந்த ஜீ மகராஜ், மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஶ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் உள்ளிட்ட பத்து மிசன் துறவிகள் முதலில் கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு விஜயம் செய்தனர்.

அங்கு விசேட பூசையின் பின்னர் இலங்கை மண்ணின் முதல் இராமகிருஷ்ணமிஷன் துறவி முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் பிறந்த இல்லத்துக்கு விஜயம் செய்து பூசை வழிபாடுகளில் ஈடுபட்டு அங்குள்ள அரும்பொருட் காட்சியகத்தையும் மணி மண்டபத்தையும் பார்வையிட்டனர்.

பின்னர் சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த பணிமன்றத்தில் இருந்து ஊர்வலமாக கொம்புச் சந்திவரை பாரம்பரிய கலை கலாசார பூரண கும்பங்களுடன் ஊர்வலமாக பத்து துறவிகளும் ஆன்மீக உணர்வுடன் அழைத்துவரப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து கொம்புச் சந்திக்கு அருகாமையில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் வளாகத்தில் அமைந்துள்ள “சாரதா பவன்” எனும் பெண் துறவிகளுக்கான தங்குமிடத்தை சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் சுஹிதானந்தஜீ மகராஜ் திறந்து வைத்தார்.

பின்னர் சாரதா நலன்புரி நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டு பகவான் ஸ்ரீ ராமகிருஸ்ணர் திருக்கோவிலில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அங்கு மாணவர்களுக்கான கணினி வள நிலையம் சுவாமியால் திறந்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உலக துணைத் தலைவர் ஆங்கிலத்தில் அருளுரையாற்றினார்.

பின்னர் அங்கு பக்தர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

திருக்கோவில் தொடக்கம் மட்டக்களப்பு வரையுள்ள இராமகிருஷ்ண மிஷன் பக்தர்கள், அபிமானிகள் கலந்து கொண்டனர்.









# வெளிநாட்டு உணவகங்களின் வருகை பாரம்பரிய உணவுகளை ஓரங்கட்டிவிடும்

## சிறுதானியப் பொங்கல் விழாவில் ஐங்கரநேசன் ஆதங்கம்

ஒரு இனத்தின் தேசிய அடையாளங்களில் உணவுப் பண்பாடும் ஒன்று. தேசியத்தைக் கட்டமைப்பதில் பண்பாட்டின் ஏனைய கூறுகளைப் போன்று உணவுப் பண்பாடும் காத்திரமான பங்களிப்பைச் செய்கிறது.

ஆனால், மதப் பண்பாட்டில் பௌத்தத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற நாம், உணவுப் பண்பாட்டில் நிகழும் ஆக்கிரமிப்புகள் குறித்துக் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம். அண்மைக் காலமாக வெளிநாட்டு உணவகங்கள் பல இங்கு கிளைகளைத் திறந்து கொண்டிருக்கின்றன.

எமது உணவுப் பண்பாட்டில் திணிக்கப்படும் மாற்றங்கள் பற்றி நாம் விழிப்படையாவிட்டால் வெளிநாட்டு உணவகங்கள் எமது பாரம்பரிய உணவுகளை மேலும் ஓரங்கட்டிவிடும். எமது ஆரோக்கியமும் மேலும் வீழ்ச்சியடையும்.

இவ்வாறு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சிறுதானியப் பொங்கல் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) ஊரெழு வளர்பிறை சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே



பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தனது ஆதங்கத்தைத் தெரியப்படுத்தியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நெல் அரிசிச் சோற்றின் வருகையுடனேயே எமது உணவுத் தட்டுகளில் இருந்து சாமை, வரகு, கம்பு, குரக்கன், குதிரைவாலி போன்ற சிறுதானியங்கள் ஓரங்கட்டப்பட்டன.

நெல் அரிசியுடன் ஒப்பிடும்போது சிறுதானியங்கள் அதிக கலோரிப் பெறுமானம் கொண்டவை. அதிக நார்ச்சத்து உடையவை. அதிக அளவில் மாப்பொருளையும் புரதத்தையும் விற்றமின்களையும் கனியுப்புகளையும் கொண்டவை. மேலதிகமாக, புற்றுநோய் எதிர்ப்புச் சேர்வைகளையும் கொண்டிருக்கின்றன. இவற்றால்தான் எமது முன்னோர்கள் தேக ஆரோக்கியத்துடன் நூற்றாண்டைக் கடந்தும் வாழ்ந்தார்கள்.

சூழலியல் நோக்கிலும் நெல்லைவிட சிறுதானியங்களே முதன்மை பெறுகின்றன. நெல் பயிரிடுவதற்கு ஈரமான தரையும் அதிகளவில் நீர்ப்பாசனமும் தேவைப்படுகிறது. ஆனால், சிறுதானியங்கள் வறண்ட சூழலிலும் குறைந்த நீர்த் தேவையுடன் வளரக்கூடியவை. நெல் நோய்களதும் பீடைகளினதும் தாக்கத்துக்கு அதிகளவில் ஆளாகும் போது சிறுதானியங்கள் இவற்றுக்கு எதிராகத் தாக்குப் பிடிக்கின்றன.

காலநிலை மாற்றம் எம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் சிறுதானியங்களை நோக்கி நாம் திரும்புவது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

எமது இளைய தலைமுறை பாரம்பரிய உணவுகளை நாகரிகமற்றதொன்றாகக் கருதும் மனப்பாங்கைக் கொண்டிருக்கின்றது. துரித உணவகங்களையே அதிகம் நாடுகிறார்கள்.

கொத்து ரொட்டியையும், பிஸாவையும், ப்ரைட் ரைஸ்சையுமே விரும்புகிறார்கள். மென்பான நிறுவனங்களின் விளம்பரங்களில் மயங்கி இந்த உணவுகளோடு சேர்த்து ஆபத்தான மென்பானங்களையும் அருந்தி வருகிறார்கள்.

தேசியம் என்பது வெறும் அரசியல் சொல்லாகியுள்ள இன்றைய சூழ்நிலையில் உணவுப் பண்பாட்டுத் தேசியம் பற்றிய புரிதலை எமது மக்களிடம் ஏற்படுத்துவது அவசியம்.- என்றார்.





# மட்டக்களப்பில் உளநல விழிப்புணர்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பொதுவான உளநல சமூக பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் வழிகாட்டுதலில் கீழ் மேலதிக மாவட்ட அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீ காந்த் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (18) இடம் பெற்றது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு பொதுவான உளநலம் மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த மேலதிக அரச அதிபர், நவீன உலகில் உளநல சமூக பிரச்சினையில் பாதிப்புக்குள்ளாகிய நபர்களைக் கையாளும் முறைகளை உத்தியோகத்தர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வின் வளவாளராக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட உளநல வைத்தியர் யூ.டி. ஜெயக்குமார் கலந்து கொண்டார்.




# கா.பொ.த. சாதாரண மாணவருக்கான இலவச ஆலோசனையும் செயலமர்வும்

(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்று இளமானி பட்டப்பயிலுனர் சங்கத்தால் ஏற்பாடு செய்து வருடா வருடம் நடத்தப்படும், கா.பொ.த. சாதாரண தர பரீட்சையை எதிர்நோக்கவுள்ள மாணவர்களுக்கான இலவச ஆலோசனை மற்றும் வழிகாட்டல் செயலமர்வு, வழமை போன்று இவ்வருடமும் அக்கரைப்பற்று இளமானிப் பட்டப்பயிலுனர் சங்கத்தின் தலைவர் ரீ.சபாக் தலைமையில் சனிக்கிழமை அக்ஃஃமுனவ்வறா கனிஷ்ட கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் அக்ஃஃமுனவ்வரா கனிஷ்ட கல்லூரி, அக்ஃஃபாயிஷா மகா வித்தியாலயம் மற்றும் அக்ஃஃஅஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலயங்களில் இருந்து சுமார் 75 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம வளவாளர்களாக அம்பாறை மாவட்ட செயலக உளவளத்துணை ஆலோசகர் மனூஸ் அபூபக்கர் மற்றும் இஸ்லாமிய மார்க்க அறிஞர் றயீஸ் ஆகியோரால் மாணவர்களுக்குப் பரீட்சை தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் மார்க்க ரீதியான விளக்கங்கள் வழங்கப்பட்டன.





# லண்டன் கன துர்க்கை அம்மன் ஆலயம் ஊடாக இலங்கையில் பல்வேறுபட்ட உதவித் திட்டங்கள்

## அறங்காவலர் சபைத் தலைவர் பரமநாதன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

பிரசித்திபெற்ற லண்டன் கன துர்க்கை அம்மன் ஆலயம் ஊடாக இலங்கையில் பல்வேறுபட்ட உதவித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என்று ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவரும் ஐக்கிய இராச்சிய வைத்தியருமான வே.பரமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், லண்டன் கன துர்க்கை அம்மன் ஆலய யாப்பின் பிரகாரம் அதன் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவித் திட்டங்களுக்கு வழங்க வேண்டும் என்பது கோட்பாடு.

அதனடிப்படையில் தற்போது நான் அவ் ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவராக இருப்பதனால் ஆலயத்தின் வருமானத்தில் ஒரு பகுதியை தொடர்ச்சியாக இலங்கைக்கு உதவித் திட்டங்கள் வழங்க அனுப்பி வருகிறோம்.

அந்த நிதியை வறுமை நிலையில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி மேம்பாடு, சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களின் பராமரிப்பிற்கு, போரால் பாதிக்கப்பட்டோருக்கான திட்டங்கள் என்று உதவிகளை வழங்கி வருகின்றோம்.



பிற நாடுகளில் வசதி வாய்ப்புக்களுடன் இருப்பவர்கள் இலங்கையில் வறுமை நிலையில் இருப்பவர்களுக்கு உதவ வேண்டும். அது மனதுக்கு நிறைவைத் தரும்.- என்றார்.

வைத்தியர் பரமநாதன் தென்மராட்சி, உசன் கிராமத்தில் தொழில்நுட்பக் கல்வி, விவசாயப் பண்ணை, தொழில் வாய்ப்பு என அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி மாதிரிக் கிராமம் ஒன்றை நிறுவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

( நாளை (19) உவேசா பிறந்த நாள் )

# எங்களின் சுவாமிநாதா என்றுமே வாழுகின்றாய்



உள்ளத்தில் தமிழுணர்வு ஊற்றெடுக்க உழைத்தாரே
ஊரூராய் அலைந்தாரே உவேசா தமிழாசான்
தெள்ளுதமிழ் நூல்களைத் தேடிநின்ற வேளை
செல்லரித்த சேதிகேட்டுத் திகைத்தவரும் நின்றாரே

ஏடுதேடி எங்கேயோ சென்றலைந்தார் அவரும்
காடுமேடு பாராமல் நடந்தலைந்தார் நாளும்
நாடுபோற்ற பணிசெய்து நலம்விளைத்தார் அவரும்
பீடுடைய தமிழ்த்தாத்தா ஆகியே விட்டார்

ஏட்டிலே இருந்தவற்றை எல்லோரும் படிக்க
காட்டியேவிட்ட எங்கள் கற்பகத்தரு ஐயா
பூட்டியே வைத்தவேட்டைப் புத்தகமாக்கி வைத்த
பாட்டனே எங்களையா பணிந்துமே போற்றுவோமே

ஏடெலாம் இடஞ்சலென்று எரித்திட முயன்றவேளை
கேடது என்று நீயும் கிளர்த்தெழுந்தாயே ஐயா
புதைகுழி வெட்டியேட்டை புதைத்தது கண்டபோது
புயலெனப் புகுந்து அங்கு புதுவழி சமைத்தாயையா

மெய்வருத்தம் பாராது விடியுமுன்னே நீஎழுந்து
கைநிறைய ஏடுகளை கண்ணாக மதித்துநிதம்
அய்யமறக் கற்றிட்டு அச்சுதனில் ஏற்றிநிதம்
செய்துநின்ற திறல்மெச்சி சிரம்தாழ்த்தி
வணங்கிடுவோம்

பைந்தமிழ் மொழியைக் தேர்ந்துமே கற்றாய்
பலருமே வியக்கத் தமிழாகி நின்றாய்
சொந்தமாய் சேர்த்த சொத்தாய் நினைத்து
சுந்தரத் தமிழினைக் காத்துமே நின்றாய்

நந்தமிழ் சங்கநூல்கள் யாவரும் கற்றுநிற்க
வெந்தழல் புகுந்தவேட்டைப் வேகமாய் பற்றி
நொந்திடச் செய்தாரை வந்தனை செய்துநின்று
செந்தமிழ் காத்தநம் செம்மலைப் போற்றுவோமே

பல்கலைக்கழகம் செய்யும் பணியினை தனியேநின்று
நல்மனம் கொண்டுசெய்த நாயகன் நீயே ஐயா
இன்தமிழ் சிறந்துநிற்க என்றுமே உழைத்தவையா
எங்களின் சுவாமிநாதா என்றுமே வாழுகின்றாய்

வடமொழி படித்தால் வானுலகு உவந்தேற்றும்
வசதிபல கிடைப்பதற்கு ஆங்கிலமே கைகொடுக்கும்
இவையனைத்தும் புறந்தள்ளி ஏந்தினார் தமிழதனை
உலகவாழ்வில் தமிழதனை உயிராக எண்ணினரே

மேடையில் பேசுதற்கும் விதம்விதமாய் எழுதுதற்கும்
சங்கத் தமிழினை தன்னுழைப்பால் எமக்களித்தார்
ஊணுறக்கம் பாராமல் ஓய்வின்றி உழைத்ததனால்
ஏடிருந்த அத்தனையும் எம்சொத்தாய் ஆக்கினரே

சாமிநாத ஐயர் தமிழுக்குச் சொத்தாவர்
நாம்படிக்க நூல்களை நற்றுணையாய் ஈந்தளித்தார்
எழுதினார் பதிப்பித்தார் ஏந்தினார் தமிழை
என்றுமே தமிழுலகில் இருந்திடுவார் உவேசா!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

# சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்க தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிர்வாகசபைக் கூட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான சைவப்புல வர், இளஞ்சைவப்புலவர் பரீட்சை செயற்பாடுகள், சிவதீட்சை வழங்கல் தொடர்பான விடயம், பரீட்சைக்கான நேரடி வகுப்புக்களை நடத்துதல், கணக் கறிக்கை சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

இதனால் அனைத்து உறுப்பினர்க ளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

# மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப்போட்டி நாளை மறுதினம் (20) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் து.திலீப்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந் தினராக பழைய மாணவனும் வடமா காணக் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளருமான எந்திரி க.கணேச மூர்த்தி கலந்து கொள்ள வுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கனடா பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த ராஜினி கருணாகரனம் கௌரவ விருந்தினராக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகா தாரத்திணைக்க அபிவிருத்தி உத்திே யாகஸ்தர் பா. ரஜீவும் கலந்து கொள்வர்.



# கோடை சூடு ஆரம்பம்...!

விடாது கொட்டித் தீர்த்து, வாட்டி வதைத்த மழை வெள்ளம் ஓய்ந்து விட்டது. இப்போது முன்பனி முடிந்து பின் பனிக் காலம். அதனால் இலங்கையில் பின்னிரவிலும் அதிகாலையிலும் ஒரு புறம் குளிர். மறுபுறத்தில் பகல் வேளையில் வெப்பம் தன் கைவரி சையைக் காட்டத் தயாராகிவிட்டது என்று தெரிகிறது.

நாட்டின் சில மாகாணங்களுக்கு வெப்பமான வானிலை தொடர்பில் எச்சரிக்கை – வெப்பச் சுட்டெண் ஆலோசனை – அறிவித்தல் நேற்று முதல் வெளியிடப் பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மற்றும் தென் மாகாணங்களிலும், இரத்தினபுரி மாவட்டங்களின் சில இடங்களிலும் வெப்பச்சுட்டெண் – அதாவது மனித உடலில் உணரப்படும் வெப்பத்தின் அளவு – விசேட கவனம் செலுத்தவேண்டிய மட்டத்தில் – 'எச்சரிக்கை நிலை' வரை அதிகரித்து – காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் அதிக வெப்பமான வானிலை நிலவும் காலப் பகுதியில் போதுமான அளவு குடி தண்ணீரைப் பருகுமாறும் நிழலான இடங்களில் ஓய்வெடுக்குமாறும் பொது மக்களுக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

நீண்ட நேரம் வெளியில் – அல்லது வெயிலில் – தொடர்ந்து வெளிப்படுதல் அல்லது செயற்படுதலால் உஷ்ணத் தாக்குதல் ஏற்படலாம் என எச்சரிக்கப் படுகின்றது.

இதனைத் தவிர குழந்தைகள், முதியோர் மற்றும் நோயாளர்கள் இது தொடர்பில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும் திணைக்களம் மேலும் தெரிவித் துள்ளது.

வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களை அடிக்கடி பரிசோதிக்கும்படியும், குழந்தைகளை மூடிய வாகனங்களுக்குள் கவனிக்காமல் விட்டுவிடாமல் இருக்கும்படியும் மற்றும் இலகுரக மற்றும் வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணியுமாறும் பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெப்ப குறியீட்டு முன்னறிவிப்பு என்பது ஈரப்பதம் மற்றும் அதிகபட்ச வெப்பநிலை ஆகியவற்றைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது. இது மனித உடலில் உணரப்படும் வெப்பம் பற்றிய கணிப்புத்தான். இது அதிகபட்ச வெப்பநிலையின் முன்னறிவிப்பு அல்ல. இது உலகளாவிய எண்ணியல் வானிலை முன்னறிவிப்பு மாதிரித் தரவைப் பயன்படுத்தி வானிலை ஆய்வுத் துறையால் தயாரிக்கப்படுகிறது. அடுத்து வரும் நாளுக்குரிய கணிப்பீடுதான் இது.

இந்தக் காலம் கோடை வெயிலின் ஆரம்பம்தான். சூரிய பகவான் தமிழர் தாயகத்தைப் பஸ்பமாக்கும் விதத்தில் தன் கதிர்களைப் பாய்ச்சும் காலம் இனித்தான் வரப் போகின்றது.

சூரிய பகவானின் அதிதேவதையான அக்னி பகவான் தன்னுடைய முழு வெப்ப கதிர்களையும் வெளிவிடும் காலத்தை அக்னி நட்சத்திரக்காலம் என்கிறோம். வருடந்தோறும் கோடை காலத்தில், சூரிய பகவான் பரணி நட்சத்திரம் தொடங்கி, கிருத்திகை நட்சத்திரம்வரை பயணிக்கும் காலத்தில் வெயிலின் தாக்கம் மிக கடுமையாக இருக்கும். இதையே அக்னி நட்சத்திர காலம் என்கிறோம். காண்டாவனம் என்றும் இதைக் கூறுவோம்.

அக்னி நட்சத்திரம் ஏப்ரல் மாதம் தொடங்கி மே மாதம் வரையில். அப்போது வெயில் வாட்டி வதைக்கும். அதற்கு இன்னும் காலம் இருக்கின்றது.

அதற்கு முன்னரே, அதன் ஆரம்பம் எச்சரிக்கையுடன் வருகின்றது.

ஜோதிட சாஸ்திரத்தின் அடிப்படையில் அக்னி நட்சத்திரம் ஒவ்வொரு வருடமும் தமிழ் திகதிப்படி சித்திரை மாதம் 21 ஆம் நாள் முதல் வைகாசி மாதம் 14ஆம் நாள் வரை இருக்கும்.

இந்த அக்னி நட்சத்திர காலத்தில் வெளியே தலை காட்ட முடியாத அளவுக்கு கத்திரி வெயிலின் வெப்பம் சுட்டெரிக்கும். தலையில் நேரடியாக வெயில் பட்டால் மூளை நரம்புகள், பார்வை நரம்புகள் போன்றவை பாதிக்கப்பட்டு உடலில் பித்தம் அதிகரித்த நிலையில் ஒற்றைத் தலைவலி, கண் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு. தோல் நோய்களும் ஏற்படும். அது மட்டுமா? அம்மை, அக்கி போன்ற வெய்யில் காலத்துக் கென்றே இருக்கும் நோய்களும் தாக்கக்கூடும்.

சூழலைக் கவனித்து எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

# மத்திய அரசை கண்டித்து சென்னையில் தி.மு.க. கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்



தேசிய கல்விக் கொள்கை தொடர்பாக மத்திய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. கூட்டணி கட்சிகள் சார்பில் இன்று சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தேசிய கல்விக் கொள்கையை ஏற்றால் மட்டுமே நிதி வழங்கப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளதற்கு தமிழகத்தில் ஆளும் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சிகள், அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதன்தொடர்ச்சியாக தி.மு.க. கூட்டணி கட்சிகள் மத்திய அரசுக்கு எதிராக கண்டன ஆர்பாட்டத்தை அறிவித்துள்ளன.

இதுகுறித்து அமைச்சர் துரைமுருகன் (தி.மு.க), கி.வீரமணி (தி.க), செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்). வைகோ (ம.தி.மு.க), பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட்) , முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட்), கே.எம்.காதர்மொகிதீன் (ஐ.யு.எம்.எல்), திருமாவளவன் (வி.சி.க), அருணாசலம் (ம.நீ.ம), எம். ஹெச்.ஜவாஹிருல்லா (ம.நே.ம), ஈ.ஆர்.ஈஸ்வரன் (கொ.ம.தே.க), தி.வேல்முருகன் (த.வா.க) ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில்,

தமிழகத்தின் உரிமைகளைச் சிதைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய மோடி அரசு எடுத்து வருகிறது. தேசிய கல்விக் கொள்கையை ஏற்கும் வரை தமிழக கல்வித்துறைக்கு நிதி தர முடியாது என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மிரட்டுகிறார். நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தமிழகத்துக்கான நிதியைத் தருவதில் பாரபட்சம் காட்டி, பட்ஜெட்டில் தொடர்ந்து தமிழகத்துக்கான திட்டங்களைப் புறக்கணிக்கிறார்.

பதவிக்காலம் முடிந்துபோன ஆளுநரை வைத்துக் கொண்டு அத்துமீறல்கள், யு.ஜி.சி. மூலம் மாநிலத்தின் கல்விக் கட்டமைப்பைச் சிதைப்பதற்கான நடவடிக்கைகள், தொடர்ச்சியான திராவிட - தமிழ் வெறுப்பு நடவடிக்கைகள், மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தித் திணிப்புக்கான முன்னெடுப்புகள் என தமிழகத்தை வஞ்சித்துக் கொண்டிருக்கும் மோடி அரசை வீறுகொண்டு எதிர்க்க வேண்டிய சூழலை உருவாக்கி வருகின்றனர்.

தமிழர்கள் தனித்துவமானவர்களாக இருப்பதும் கல்வி - வேலைவாய்ப்பு - சமூகநீதி - வாழ்க்கைத்தரம் என அனைத்து வகையிலும் உயர்ந்திருப்பதும் மோடி அரசின் கண்களை உறுத்துகிறது. அது, அரசியல்ரீதியாகப் பா.ஜ.கவை அண்டவிடாத தமிழக மக்களின் மீது வெறுப்பை உமிழ்கிறது. பிளவுவாத சக்திகளுக்கு எதிராக ஓரணியில் நிற்கும் தமிழகத்தை வீழ்த்திவிட முயற்சிக்கிறது.

வீழ்த்த முயற்சிக்கும் போதெல்லாம் தமிழகம் ஒன்றிணையும், எதிரி எந்த வடிவில் வந்தாலும் துணிந்து நிற்கும். அப்படியான ஒரு சூழலை வலிந்து உருவாக்கி வரும் மோடி அரசைக் கண்டித்து முதற்கட்டமாக அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று மாலை 4 மணியளவில் சென்னை ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெறுகிறது." இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# எல்லீஸ்புரம் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை இடிக்க முயற்சி

## அண்ணா சாலையில் மறியல்



சென்னை அண்ணா சாலை அருகே எல்லீஸ் சாலையில் உள்ளது எல்லீஸ்புரம். இங்குள்ள வீடுகள் மிகவும் பழுதாகிவிட்டதால் அவற்றை இடிக்க தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகளும், பணியாளர்களும் நேற்று வந்தனர். வீடுகளை இடிக்க அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதையும் மீறி வீடுகளை இடிக்க முற்பட்டபோது ஆத்திரமடைந்த மக்கள் அண்ணா சாலையில் மறியலில் ஈடுபட்டனர். சம்பவ இடத்துக்கு வந்த போலிஸாரும், அதிகாரிகளும் சமரசம் பேசியதையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

இதுகுறித்து எல்லீஸ்புரம் பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

"எல்லீஸ்புரத்தில் உள்ள வீடுகள் மிகவும் பழுதாகி, வசிப்பதற்கு தகுதியற்றதாக இருப்பதால் வீடுகளைக் காலி செய்யும்படி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நோட்டீஸ் அனுப்பியது. 65 ஆண்டுகளாக இங்கு வசிக்கிறோம். எங்களின் வாழ்வாதாரம் இங்கு இருப்பதால், எங்களுக்கும் எங்களின் குடும்பத்தினருக்கும் மட்டுமே வீடுகளை ஒதுக்க வேண்டும்.

வெளி நபர்களுக்கு இங்கு வீட்டை ஒதுக்கக்கூடாது. புதிதாக வீடுகளைக் கட்டி கட்சிக்காரர்களுக்கு கொடுத்து விடுவார்கள் என்ற அச்சம் காரணமாகவே எதிர்க்கிறோம். மழை பெய்தால் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து விடுகிறது. பெரும் சுகாதாரக் கேடு உள்ளது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி எந்தப் பலனும் இல்லை." என்றனர்.

# பொலிவியா பஸ் விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் பலி

பொலிவியாவின் மலைப்பாதையில் பஸ் விபத்துக்குள்ளானதில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என அந் நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனம் தென்மேற்கு மாவட்டமான யோகல்லாவில் சுமார் 800 மீற்றர் (2625 அடி) பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் நான்கு குழந்தைகள் உட்பட 14 பேர் காயமடைந்தனர் என்று உள்ளூர் மருத்துவமனை அதிகாரி ஒருவர் சர்வதேச ஊடகங்களிடம் உறுதிபடுத்தியுள்ளார்.

பொலிவியாவின் மலைப்பகுதிகளில் ஆபத்தான வீதிகள் உள்ளன.

இந்த விபத்து Potosí மற்றும் Oruro நகரங்களுக்கு இடையே நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.



அதிவேகமாக பயணித்ததால், சரதியின் கட்டுப்பாட்டை இழந்து பஸ், பள்ளத்தில் விழ்ந்து விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என ஆரம்ப கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டில் இதுவரை தென் அமெரிக்க நாட்டில் பதிவான மிக மோசமான சாலை விபத்து இதுவாகும்.





# மாலியில் தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 48 பெண்கள் பலி

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில், பெண்கள் 48 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் கென்யா மாவட்டத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்த தங்க சுரங்கத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சுரங்கம் திடீரென இடிந்து விழுந்து நூற்றுக்கணக்கானோர் மண்ணில் புதைந்துள்ளனர்.

உடனடியாக மீட்பு படையினர் வரவழைக்கப்பட்டு மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கி, பெண்கள் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.



# அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மீது விரைவில் வரி விதிக்கப்படும்

அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மீது வரி விதிப்பது தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில், ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி வரி விதிப்பு அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவிற்குள் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் போது இந்த வரி விதிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறான வரி விதிப்பு மேற்கொள்ளப்படும் என்பது குறித்த சரியான தகவல்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்கு அதிகளவில் வாகனங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வரிசையில் மெக்ஸிக்கோ மற்றும் கனடா ஆகியன முன்னணி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 18/02/2025

## டொரன்டோவில் கொலை; சந்தேகநபரை தேடும் பொலிஸ்

கனடாவின் டொரன்டோவில் இடம் பெற்ற படுகொலை சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய நபரை பொலிஸார் தேடி வருகின்றனர். ஸர்பருன் மற்றும் குயின் வீதிகளுக்கு அருகாமை 02





# புதிய புலம்பெயர்தல் கட்டுப்பாடுகள் கனடா அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம்

**புலம்பெயர்தலுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுத்துவரும் கனடா அரசு, புதிய கட்டுப்பாடுகள் சிலவற்றை அறிமுகம் செய்துள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட தற்காலிக குடியிருப்பு ஆவணங்களான கல்வி மற்றும் பணி அனுமதிகளை ரத்து செய்யும் வகையில் எல்லை மற்றும் புலம்பெயர்தல் அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

இந்த விதி, இந்த ஆண்டு, அதாவது, 2025 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 31ஆம் திகதி அமுலுக்கு வந்துள்ளது.

1. கல்வி மற்றும் பணி அனுமதி வைத்துள்ளவர்கள் நிரந்தரக் குடியிருப்பு அனுமதியை எட்டும்போது, அவர்களுடைய கல்வி மற்றும் பணி அனுமதிகள் ரத்து செய்யப்படும்.
2. கல்வி மற்றும் பணி அனுமதி வைத்துள்ளவர் மரணமடையும்போது அவருடைய அனுமதிகள் ரத்து செய்யப்படும்.
3. கல்வி மற்றும் பணி அனுமதி வைத்துள்ளவர்களின் அனுமதிகள், நிர்வாகக் குளறுபடிகள் காரணமாக தவறுதலாக வழங்கப்பட்டிருக்குமானால் அந்த கல்வி மற்றும் பணி அனுமதிகள் ரத்து செய்யப்படும்.

மேலும், குற்றப் பின்னணி, பாதுகாப்பு அச்சுறுத்தல், விண்ணப்பங்கள் செலுத்தும்போது பொய்யான தகவல்கள் வழங்கியது முதலான காரணங்களுக்காக, மின்னணு பயண அங்கீகாரம் மற்றும் தற்காலிக குடியிருப்பு விசாக்களை ரத்து செய்யவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



# ஒன்றாறியோ மாகாண தேர்தலில் ஆளும் கட்சிக்கு கூடுதல் ஆதரவு

ஒன்றாரியோ மாகாணத்தில் நடைபெற உள்ள தேர்தலில் ஆளும் கட்சிக்கு கூடுதல் ஆதரவு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சி, ஆட்சி செய்து வருகின்றது.

முதல்வர் டாக் போர்ட் முன்கூட்டியே தேர்தலை அறிவித்திருந்தார்.

கட்சிகளுக்கான ஆதரவு தொடர்பில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சிக்கு கூடுதல் ஆதரவை காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

கட்சிக்கு 45 வீத மக்கள் ஆதரவும் லிபரல் கட்சிக்கு 29.5 வீதம் ஆதரவும் என்டிபி கட்சிக்கு 17.7 வீத ஆதரவும் பசுமை கட்சிக்கு 5.4வீதம் ஆதரவும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சிக்கான ஆதரவு வலுவான நிலையில் காணப்படுகின்றது என தெரி





# கனடாவில் தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளான விமானம்

## 18 பேர் காயம்

டொராண்டோவின் பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று திங்கள்கிழமை பிற்பகல் டெல்டா ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் குறைந்தது 18 பேர் காயமடைந்துள்ளனர் என கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மினியாபோலிஸிலிருந்து வந்த டெல்டா ஏர் லைன்ஸ் விமானம் டொராண்டோ நேரப்படி பிற்பகல் 2:30 மணியளவில் விமான நிலையத்தில் விபத்துக்குள்ளானது.

இதன் விளைவாக அவசரகால பணியாளர்களின் மீட்பு பணிகளுக்காக பல மணி நேரம் விமான நிலையம் மூடப்பட்டது.

விபத்தின் பின்னர் விமான நிறுவனம் தனது இணையதளத்தில் மாலை 5:42 மணிக்கு வெளியிட்ட ஒரு அறிக்கையில் துரதிர்ஷ்வசமான சம்பவத்தினால் 18 பேர் காயமடைந்தனர் என்று குறிப்பிட்டது.

எனினும், மாலை 07.00 மணியளவில் பியர்சன் விமான நிலையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி காயம டைந்தவர்களின் எண்ணிக்கை 17 என்று கூறினார்.

விமானத்தில் நான்கு பணியாளர்கள் மற்றும் 76 பயணிகள் இருந்தனர்.

அவர்களில் 22 கனேடியர்கள், ஏனையவர்கள் பன்னாட்டுப் பயணிகள் என்றும் விமான நிலையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டெபோரா பிளின்ட் செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

மேலும், விபத்தில் காயமடைந்த பயணிகள் அனைவரும் உள்ளூர் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர் உறுதிபடுத்தினார்.

விபத்தின் பின்னர் திங்கள்கிழமை விமான நிலை




யத்திலிருந்து புறப்படும் பெரும்பாலான விமானங்கள் தாமதமாக அல்லது இரத்து செய்யப்பட்டன.

புறப்பாடும் வருகையும் மாலை 5 மணிக்குப் பின்னர் மீண்டும் வழமைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் விமான நிலையம் தெரிவித்துள்ளது.

டெல்டா ஏர் லைன்ஸின் 4819 விமானம், வார இறுதியில் டொராண்டோ பகுதியைத் தாக்கிய குளிர்காலப் புயலைத் தொடர்ந்து வீசும் பனிக்கு மத்தியில் மினியா போலிஸிலிருந்து வந்தது.

இந்த விமானத்தை அதன் துணை நிறுவனமான எண்டெவர் ஏர் இயக்குவதாக டெல்டா தெரிவித்துள்ளது.

இந்த விபத்துக்கு என்ன காரணம் என்பது குறித்து உடனடி தகவல் இல்லை.

கனடா போக்குவரத்து ஆணையகம், இது குறித்த விசாரணைகளை தற்சமயம் ஆரம்பித்துள்ளது.

விசாரணைக்காக இரண்டு ஓடுபாதைகள் மூடப்பட்டிருக்கும் என்றும், விமான நிலையம் வழியாக பயணிக்கும் எவருக்கும் வரும் நாள்களில் தாமதம் ஏற்படும் என்றும் பிளின்ட் மேலும் கூறினார்.






## டொரன்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

43 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கொல்லப்பட்டிருந்தார்.

இந்த படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் றொபர்ட்சன் பெரி என்ற 24 வயதான நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மேற்படி நபருக்கு எதிராக நாடு தழுவிய அடிப்படையில் பிடிவிராந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் ஐந்து அடி ஏழு அங்குலம் உயரமுடியவர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் அது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# பிரிட்டிஷ் கொலம்பியவில் பனி படர்ந்த ஏரியில் தேசிய கொடி உருவாக்கினார் சிரேஸ்ட பிரஜைகள்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் சில சிரேஷ்ட பிரஜைகள் பனி படர்ந்து உறைந்த ஏரியின் மேல் பாரிய அளவிலான தேசியக்கொடியினை வடிவமைத்துள்ளனர்.

சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் முயற்சி செய்து இந்த தேசிய கொடியின் சின்னம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கெலோனாவின் ஹாலிடே பாக் பகுதியில் வசிப்பவர்கள் இந்த கொடியை வடிவமைத்துள்ளனர்.

தேசிய ரீதியில் கொண்டாடப்படும் கொடி நாளை முன்னிட்டு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடா மீது வரி விதிப்பதாக அறிவித்துள்ள நிலையில் பல்வேறு இடங்களில் தேசப்பற்றை வெளிப்படுத்தும் வகையிலும் தேசிய ஒற்றுமையை உறுதி செய்யும் வகையிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த சின்னம் 320 அடி நீளத்தையும் 120 அடி அகலத்தையும் கொண்டது என தெரிவிக்கப்படுகிறது.

விமானங்களில் இருந்து பார்க்கும் போது இந்த கொடியை தெளிவாக பார்க்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.






# நாய் கடிக்கு இலக்கான சிறுவனுக்கு தீவிர சிகிச்சை

கனடாவில் நாய் கடிக்கு இலக்கான சிறுவன் ஒருவன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் எட்மாண்டன் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

14 வயதான சிறுவனே இவ்வாறு நாய் கடிக்கு இலக்காகி படுகாயம் அடைந்துள்ளார். என்ட்விஸ்டல் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த சிறுவன் ஹெலிக்காப்டர் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி நாயை வளர்த்த நபர் பொலிஸில் சரணடைந்தார் என தெரிவிக்கப்படுகிறது.